[25th October 1971

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) இது போன்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால் நீலகிரி மாவட்ட (உதகமண்டலம்) தமிழ்நாடு, வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்திலிருந்து "திட்டப்படி" (Project allowance) அளிக்கும்படி கேட்டு ஒரு கோரிக்கை வந்துள்ளதாகவும் அக்கோரிக்கை தன் பரிசீலனையிலிருப்பதாகவும், வேளாண்மை இயக்குநர் கூறியிருக்கிறார்.

Soil Testing Laboratory at Ooty.

* 16 @ Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to open Soil Testing Laboratory at Ootacamund by the Indo-German Development Project; and

(b) if so, the details thereof?

உதகை மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதக மண்டலத்தில் இந்தோ-ஜெர்மானிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஏற்கனவே உதகையில் இந்திய ஜெர்மானிய உதகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு மண் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. மற்றுமொரு நிலையம் ஆரம்பிப்பது பற்றி மேற்படி திட்ட அதிகாரிகளிடமிருந்து செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

State Seed Farms.

* 17 @ Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that a number of State Seed Farms are working at a loss;

(b) if so, the names of such seed farms; and

(c) the loss so far incurred by each one of them?

@ Postponed from the list of Questions for 22nd October 1971.

25th October 1971]

அரசு விதைப் பண்ணைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு விதைப் பண்ணைகள் பல விரயத்தில் செயல் படுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்த விதைப் பண்ணைகளின் பெயர்கள் யாவை ?

(உ) அவை ஒவ்வொன்றிலும் இதுவரையில் ஏற்பட்ட விரயம் யாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 59 விதைப் பண்ணைகள் இருப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 62 விதைப் பண்ணைகள் இருப்பதாக முன்பு அரசாங்கம் சொன்னதாக எனக்கு நினைவு. அதில் 3 விசைப் பண்ணைகள் என்ன ஆயிற்று ? இந்த விதைப் பண்ணைகளில் ஏற்படுகிற நஷ்டத்தைத் தடுப்பதற்கு ஏதாவது குழு அமைக்கப்பட்டதா ? அதன் பரிந்துரைகள் என்ன ? அவற்றை அனுசரித்ததின் மூலம் நஷ்டம் குறைந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ் நாட்டில் 59 அரசுப் பண்ணைகள் உள்ளன. இப்போது புதிதாக திருச்சியில் அறிஞர் அண்ணா விதைப் பண்ணை துவக்கப்பட்டு, மொத்தம் 60 விதைப்பண்ணைகள் நடைபெறுகின்றன. அதில் 3 நஷ்டத்தில் இருப்பதாகத் தெரிவிக் கப்பட்டது. இப்போது மொத்தம் 11 விதைப் பண்ணைகள் நஷ்டத்தில் இயங்கிவருகின்றன. அதற்கான காரணங்களை அதில் குறிப்பிட்டிருக்கிறோம். இது சம்பந்தமாக சில பண்ணைகளை நாங்களே நேரில் பார்வையிட்டு எவை சரியாக லாபகரமாக இயங்கவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி எவற்றை மூட வேண்டுமோ அதையெல்லாம் முடிவு செய்து மூடிவிடவும் நல்லமுறையில் விரிவாக்கினால் பயன்படும் என்று தெரிவதை விரிவாக்கவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : நஷ்டத்திற்கான காரணம் இதில் கூறப்படவில்லை. அதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் 11 பண்ணைகளில் மணிமுத்தாறு பண்ணை நஷ்டத்திற்கு முக்கிய காரணம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பம்ப்செட்டிலிருந்து போதுமான தண்ணீர் பாசனத்திற்குக் கிடைக்காத நிலைமையில் இருந்தது. பாதிக்கப்பட்ட குழாய்களை சீர்படுத்தி, போதுமான தண்ணீர் பாசனத்திற்கு அளிக்கப்பட்டால்,

---

@ Printed as Appendix I on pages 229–230

[25th October 1971

இத்திட்டம் லாபகரமாக இயங்கும். அடுத்து, வாழவச்சானூர் பண்ணை 1969-70 வரையில் லாபத்தில் இயங்கிவந்தது. 1—7—70 முதல் 30—12—70 வரையில் மழை இல்லாததால், தண்ணீர் போதாமல் நஷ்டம் ஏற்பட்டது. தேவகோட்டைப் பண்ணையில் கடுமையான வறட்சியால் போதுமான நீர்ப்பாசன வசதியில்லாமல் புஞ்சைப் பயிர்கள் வறண்டு விட்டன. அதனால் அந்தப் பண்ணையின் பரப்பளவு 70 ஏக்கராகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பாசனத்திற்கு ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது. மேலும் இரண்டு கிணறுகள் தோண்டி, பாசனத்திற்குத் திட்டம் போடப் பட்டுள்ளது. அந்தப் பண்ணைகளின் பொருளாதார நிலை உயர் வடைய வாய்ப்புள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, பெரும் பாலான பண்ணைகளில் பாசன வசதியில்லாத காரணத்தால், நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பண்ணைகளை ஏற்படுத்துகிறபோது, அதற்குத் தகுந்த பாசன வசதி கிடைக்குமா என்று பார்க்கா மலேயே ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதனாலேயே நஷ்டம் வருகிறது என்பதை அரசு அறியுமா? இதுபோன்ற பண்ணைகள் மேலும் திறக்கப்படும்போது, பாசன வசதி சரியாக இருக்கிற இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணைகள் பெரும்பாலும் 1967-ம் ஆண்டுக்கு முன்பே துவக்கப்பட்டவை. அப்போது எந்த அடிப்படையில் துவக்கப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. பல்வேறு பண்ணைகளைப் பொறுத்த வரையில், மேலும் அபிவிருத்தி செய்தாலும் பயன்படாது என்று தெரிந்தவைகளை மூடிவிட முடிவு செய்துள்ளோம். மேலும் எப்படித் திருத்தங்கள் செய்தால், மேலும் பயனுள்ளதாக்கலாம் என்பதற்குத் திட்டம் தயாரிக்கச் சொல்லி யிருக்கிறோம். அங்கத்தினர் சொல்லியதைப் போல, இப்போது ஏற்படுத்தப்படுகிற பண்ணைகளை நல்ல நிலவளம், நீர்வளம் உள்ள பகுதிகளாகப் பார்த்து, அதற்கான தகுதிச் சான்று பெற்ற பிறகு தான், திறக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that the Government of India have proposals to set up Seed Farms specially for growing drought resistance seeds, may I suggest to the Hon. Minister, Sir, that in view of the lack of water, these farms may be utilised for testing these drought resistance varieties?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது வறட்சிப் பகுதிகளுக்கு ஏற்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கு தமிழக அரசின் சார்பிலேயே அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இருக்கிற குடுமியான்மலை பண்ணையில் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதில் கண்டு பிடிக்கிற விதைகள் வறட்சிப் பகுதி—மானவாரிப் பகுதி பயிர் களுக்குப் பயன்படும் அளவில் செயல்படுகிறது. அண்மையில்

ஆரம்பிக்கப்பட்ட செங்கம் பண்ணையில் வறட்சிப் பயிர்களைத்தான் உண்டாக்குகிறார்கள். தண்ணீர் வசதி போதுமானதாக பெற்று பிறகுதான் துவக்க வேண்டுமென்ற காரணத்தால், இப்போது அந்த வசதி பெற்றதால், அந்தத் திட்டம் அண்மையில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

Pesticide.

*18. † *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the name of the chemical pesticide that is being used in Aerial spraying by the State Agriculture Department; and

(b) whether it is in any way harmful to the human beings in the area?

பூச்சிக் கொல்லி மருந்து

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில வேளாண்மைத் துறையால் விமானத்திலிருந்து மருந்து தெளிப்பதற்குப் பயன் படுத்தப்படும் இரசாயன பூச்சிக் கொல்லி மருந்தின் பெயர் என்ன?

(இ) அப்பகுதியிலுள்ள மனிதர்களுக்கு அது துன்பம் அளிக்கக்கூடியதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இன்ன வியாதி யுள்ள பயிருக்கு இன்னவிதமான பூச்சி மருந்துதான் உபயோகப் படுத்த வேண்டும் என்று பயிர் பாதுகாப்புக் குழு சிபாரிசு செய்த மருந்துகளே விமானம் மூலம் பூச்சி தெளிப்புக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன. 1970-71-ம் ஆண்டில் ஆகாய விமானம் மூலம் தெளித்த பூச்சி மருந்துகளின் விவரப்பட்டியல் @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) பயிர்களுக்கு விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப் பதினால் எவ்வித தீங்கும் மனிதர்களுக்கு ஏற்பட்டதாக தகவல் ஏதும் இதுவரை விவசாய இயக்குநருக்கு வந்ததில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to state whether the State Agricultural Department has been using ' Bromin ' for the preservation of foodgrains and other cereals?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இது பயிரைப் பற்றிய கேள்வி. உயிரைப் பற்றிய கேள்வி தனியாகப் போட்டால், அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பூச்சி மருந்துகள் என்று கிட்டத்தட்ட ஏழெட்டு மருந்துகளைக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றில் சில விலை அதிகமானவையாகவும் சில விலை குறைந்தும் சில

† Postponed from the list of questions fro 22nd October 1971.
@ Printed as Appendix II on page 231